# சீர்காழி நகராட்சி



2018–ம் ஆண்டு மே மாதம் 16.05.2018 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதா கூட்ட நடவடிக்கை.

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

**பொருள் எண்–1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலக வலைதள செய்தி நாள். 10.05.2018. ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகத்தால் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–2019 ன்கீழ் தார் சாலை பணிகள் மேற்கொள்ள திட்ட பிரேரணை அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்கண்ட சாலைப்பணிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ.500/– இலட்சத்திற்கு திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்தின் அனுமதிபெற்று அனுப்பிவைக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

| வ,எண் | வார்டு எண் | பணியின் விவரம் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| | | **சிப்பம்–1** | | |
| 1 | 1 | புளிச்சகாடு மெயின் ரோடு | 2.83 | 115.20 |
| 2 | 2 | தியாகராஜன் நகர் | 0.18 | 7.30 |
| 3 | 2 | ராகவேந்திரா நகர் | 0.33 | 13.10 |
| 4 | 2 | பெத்தடித் தெரு | 0.27 | 11.50 |
| 5 | 2 | பனங்காட்டுத் தெரு | 0.20 | 8.50 |
| 6 | 4 | வடபாதி மாரியம்மன் கோயில் தெரு | 0.21 | 9.20 |
| 7 | 5 | பாலாஜி நகர் முதல் மற்றும் இரண்டாவது குறுக்குத் தெரு | 0.17 | 8.50 |
| 8 | 16 | திருவந்திக் கட்டளைத் தெரு | 0.50 | 26.70 |
| | | **கூடுதல்** | **4.69** | **200.00** |
| | | **சிப்பம்–2** | | |
| 9 | 20 | வ.ஊ.சி நகர் கிழக்கு மற்றும் மேற்கு தெருக்கள் | 0.29 | 9.50 |
| 10 | 21 | சபரி நகர், வி.எஸ்.ஆர் நகர், வி.என்.பி நகர் மற்றும் ஆர்.கே.டி நகர் | 0.52 | 18.00 |
| 11 | 21 | வி.என்.எஸ் நகர் மெயின் ரோடு மற்றும் இரண்டாவது குறுக்குத் தெரு | 0.25 | 7.00 |
| 12 | 21 | டி.பி.எஸ் நகர் | 0.45 | 16.50 |
| 13 | 21 | எம்.ஆர்.ஆர் நகர் மற்றும் அம்மன் நகர் | 0.50 | 21.00 |
| 14 | 22 | துறையூர் மெயின் ரோடு மற்றும் பள்ளிக் கூடத் தெரு | 0.67 | 24.00 |
| 15 | 22 | பனமங்கலம் வடக்கு தெற்கு மற்றும் குறுக்குத் தெருக்கள் | 2.24 | 81.50 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | 23 | தாடாளன் காமராஜபுரம், கோவில்பத்து பிள்ளையார் கோவில் தெரு மற்றும் கோவில்பத்து மேலத் தெரு | 0.78 | 22.50 |
| | **கூடுதல்** | | **5.70** | **200.00** |
| **சிப்பம்–3** | | | | |
| 17 | 6 | இரணியன் நகர், புலிக்குடி சலீம் தெரு மற்றும் புலிக்குடி சந்து | 1.20 | 38.80 |
| 18 | 11 | காமராஜர் தெரு | 0.33 | 12.20 |
| 19 | 12 | திருமஞ்சன வீதி, தேர் வடக்கு வீதி, வடம்போக்கி சந்து மற்றும் தேர் தெற்கு வீதி சந்து | 0.60 | 18.30 |
| 20 | 12 | புழுகாப்பேட்டை முதல் கொள்ளிடம் முக்கூட்டு வரை | 0.10 | 4.50 |
| 21 | 13 | ஜெகன்நாதபுரம் | 0.18 | 7.60 |
| 22 | 18 | பன்னீர்செல்வம் தெரு (பேவர் பிளாக்) | 0.17 | 6.00 |
| 23 | 18 | பங்களாதோப்புத் தெரு, இந்திரா நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெருக்கள் | 0.38 | 12.60 |
| | **கூடுதல்–** | | **2.96** | **100.00** |
| | **ஆக கூடுதல்** | | **13.35** | **500.00** |

அலுவலக குறிப்பு .1) மன்றம் அனுமதிக்கலாம்

2) தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–2019– ன்கீழ் ரூ. 500/– இலட்சத்தை இந்நகராட்சியின் நிதி நிலமையினை கருத்தில் கொண்டு தமிழக அரசின் முழுமான்யம் பெற்று மேற்கண்ட சாலை பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்–1426/2018/இ1

**பொருள் எண்–2**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டம் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவரகளின் ஆய்வுக்கூட்ட அறிவுறைகளின் படி சீர்காழி நகராட்சியில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் போக மீதமுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு மதிப்பீடு தயார் செய்து கருத்துரு அனுப்ப கேட்டதின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது இந்நிதியை தமிழ்நாடு நகர்ப்புற சேவை கட்டமைப்பு நிதி இணையம் (TUFIDCO) மூலம் வட்டி இல்லா கடனாக பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கிட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பிவைக்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| நகராட்சியின் மொத்த வரிவிதிப்புகள் | - | 9022 |
| நகராட்சியின் மொத்த வீடுகள் | - | 9725 |
| வழங்கப்படவேண்டிய மொத்த இணைப்புகள் | - | 7821 |
| ஏற்கனவே உள்ள குடிநீர் குழாய் இணைப்புகள் | - | 825 |
| தற்போது வழங்க வேண்டிய குடிநீர் இணைப்புகள் | - | 6996 |
| மதிப்பீட்டு தொகை | - | 228.00 இலட்சம் |

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்–1189/2018/இ1

**பொருள் எண்–3**

சீர்காழி நகரத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் நடத்தப்பட்ட மாதாந்திர ஆய்வு கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி சீர்காழி நகராட்சி ஈசான்ய தெருவில் அமைந்துள்ள உரக்கிடங்கில் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாக சேகரிக்கப்பட்ட குப்பைகளை நவீன முறையில் அகற்றி இடத்தை சமன்செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.75.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள திட்ட பிரேரணை தயார் செய்து தனி அலுவலர் முன்அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக மண்டல

| | |
|---|---|
| | இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதிக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. .<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–4 | சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகர பகுதிகளில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளில் மக்கும் குப்பைகளில் இருந்து உரம் தயாரிப்பதற்கு நுண்உரம் செயலாக்க மையம் அமைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் நடத்தப்பட்ட மாதாந்திர ஆய்வு கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுரை வழங்கியதின் பெயரில் சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட தென்பாதி சாய் பாபா கார்டனில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காவில் உரம் செயலாக்க மையம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.56.00 இலட்சத்திற்கு பணிகள் மேற்கொள்ள திட்ட பிரேரணை தயார் செய்து தனி அலுவலர் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–5 | சீர்காழி நகராட்சி–பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கும் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் டிராக்டர் TN82Z–8640 டெய்லர் TN82Z–8636 வாகனத்தில் உள்ள ஹைட்ராலிக்பம்ப் இயங்காததால் குப்பைகளை உடனுக்குடன் அகற்ற இயலாத சூழ்நிலையில் பழுதுகளை அவசர அவசியம் கருதியும். பொதுசுகாதார நலன் கருதியும் மேற்கண்ட பழுது பணியினை செய்வதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் ரூ.7500/–க்கு M.M.K. ஆட்டோகேர் நிறுவனத்தில் விலைப்புள்ளி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டமையை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு. மன்றம் பதிவு வழங்கலாம்.<br>ந.க.எண்.3317/2017/எச்.1 |
| பொருள் எண்–6 | சீர்காழி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகராட்சி எல்லைககுட்பட்ட பகுதிகளில் தினந்தோறும் சேகரிக்கப்படும் குப்பைகளில் இருந்து மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை அந்தந்த பகுதிகளில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பூங்காக்களில் (Onsite Compost) மக்கும் குப்பைகளை இட்டு உரம் தயாரிக்கும் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர். அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுறையின் படி அமைத்து தர துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின் படி நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுறை படியும் உரம் தயாரிக்க கீழ் கண்ட இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.<br><br>**வ.எண் / வார்டு எண் / அமைந்துள்ள இடம் / பூங்காவின் பெயர்**<br>1 / 2 / சுபஸ்ரீ கார்டன்<br>2 / 14 / காந்தி பூங்கா<br>3 / 21 / திரிபுரசுந்தரி நகர் பூங்கா<br><br>மேற்கண்ட 3 இடங்களில் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| பொருள் எண்–7 | சீர்காழி நகராட்சி – சிறப்புச்சாலைகள் திட்டம் (S.R.P)- 2015–16 ன் கீழ் சாலை பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை–09. அவர்கள் மூலம் செய்திதாள் விளம்பரம் 24.09.2015 அன்று செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.85,764/– மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் (T.U.R.I.P) 2017-18 ன் கீழ் சாலை பணிகள் செய்திட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை–09. அவர்கள் மூலம் செய்திதாள் விளம்பரம் 12.11.2017 அன்று செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.68,040/– வரப்பெற்றுள்ளது. ஆக கூடுதல் ரூ.1,53,804/- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை–09. அவர்களுக்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| பொருள் எண்–8 | இந்நகராட்சியில் வார்டு எண்–23 கோவில்பத்து நகராட்சி தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியர் கேட்டு கொண்டதற்கு இனங்க ஆணையர், பொறியாளர் ஆகியோருடன் நேரில் ஆய்வு செய்தபொழுது பள்ளி கட்டிடம் முழுவதும் செதம் அடைந்த நிலையில் இருப்பதால் அதனை இடித்து அப்புரப்படுத்திவிட்டு புதிய கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. மேற்படி பள்ளியில் பயின்று வரும் மாணவ, மாணவிகளின் கல்வி நலனை கருத்தில் கொண்டு. அப்பகுதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கூடத்தில் தற்காளிகமாக மாணவ, மாணவிகளின் கல்வியின் அவசியத்தை கருத்தில் கொண்டு. மேற்படி பணியின் அவசர அவசியமாக உள்ளதால் இடம் மாற்றம் செய்து சமுதாய கூடத்தில் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்புபணி செய்யப்பட்டு. பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–9 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2018–19 ஆம் ஆண்டிற்கான தெருக்களில் உள்ள குடிநீர் விநியோக குழாய்களில் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதை சரிசெய்திடவும் பொது மக்களின் நலன் கருதியும், குடிநீர் வீணாகாமல் தடுத்திடவும் மற்றும் தொற்று நோய்கள் வராமல் தடுத்திடவும் குழாய் உடைப்புகளை சரிசெய்திட ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5,00,000/– ஐ நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–10 | சீர்காழி நகராட்சி குடிநீர் பராமரிப்புபணிகள் அனைத்தும் நகராட்சி பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கைபம்புகள், சிறுமின் விசைபம்புகள், பொது குழாய்கள் மற்றும் பொது கழிவறைகள் அனைத்துற்கும் உதிரி பாகங்கள் தேவைப்படுவதாக நகராட்சி பம்பு பிட்டர் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளரிடம் கேட்டுக்கொண்டதற்கு இனங்க ஆணையர் அவர்களின் அறிவுரையின் படி ரூ.1.50 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–11 | சீர்காழி நகராட்சி பகுதி பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி கொள்ளிடம் ஆற்றில் உள்ள ஆழ்துளாய் கிணறுகள் மற்றும் தரை மட்ட கிணறுகளில் இருந்து பெறப்பட்டு சீர்காழி நகரில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. சித்தமல்லியில் இருந்து வரும் பிரதான குழாய் 16.10 கி.மீ நீளத்திற்கு TWAD மூலம் AC பைப் அமைக்கப்பட்டிருந்தது. அதில் IUDM 2013-14 திட்டத்தின் மூலம் 10 கி.மீ அளவுக்கு புதியதாக DI 350 பைப்பு அமைக்கப்பட்டுள்ளது. மிதமுள்ள 6.10 கி.மீட்டரில் அடிக்கடி உடைப்புகள் ஏற்படுவதால் நகர பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வது தடைப்படுவதை தவிர்திட நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அறிவுறையின் படி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டி அருகில் புதிய ஆழ்துளாய் கிணறு அமைத்து அதிலிருந்து விநியோகம் செய்திட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதிபெற்று நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–12 | சீர்காழி நகராட்சி பகுதி பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி கொள்ளிடம் ஆற்றில் உள்ள ஆழ்துளாய் கிணறுகள் மற்றும் தரை மட்ட கிணறுகளில் இருந்து பெறப்பட்டு சீர்காழி நகரில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. தற்போது கோடைக் காலமாக உள்ளதால் தற்போது இயங்கி வரும் கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளதால் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு பற்றாகுறையாக உள்ளது. மேலும் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் நேரில் சித்தமல்லி கொள்ளிடம் ஆற்றில் தள ஆய்வு மேற்கொண்ட இரண்டு கிணறுகளை தூர்வாறி அதில் ஒன்றில் புதிய 15 HP மோட்டார் பொருத்தினால் சீர்காழி நகருக்கு போதுமான அளவு குடிநீர் வழங்க இயலும் என அறிவுரை வழங்கியதின் |

<table>
<tr><td></td><td>பெயரில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதிபெற்று நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள் எண்–13</td><td>நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநர், சென்னை அவர்களின்மின் ஆளுமை தொடர்பான ஆய்வுக்கூட்டம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டம் 30.11.2015 அன்று கூட்டத்தில். இந்நகராட்சியின் சார்பில் உதவி கணினி திட்ட அமைப்பாளர் கலந்து கொண்டபோது அறிவுறுத்தப்பட்ட அனைத்து நகராட்சிகளிலும் கணினி மயமாக்குதல் பணியில் நகராட்சி அலுவலக பணிகள் அனைத்தும் சென்டிரைலைசுடு வெப் சர்வர் சாப்ட்வேர் மூலம் முழுவதுமாக இயங்க வைக்க வேண்டும் என்பதும், அதன் தொடர்பாக மின் ஆளுமை பொருட்கள் அனைத்து பிரிவு எழுத்தர்களுக்கும் கணினி, பிரிண்டர் மற்றும் ஸ்கேனர் தனித்தனியே வைத்து தரப்பட வேண்டும் என தெரிவித்துள்ளதற்கு இனங்க இந்நகர் மன்ற தீர்மான எண்-964 நாள்-16.12.2015ல் ரூ.15.00 இலட்சத்திற்கு கணினி, பிரிண்டர் மற்றும் ஸ்கேனர்கள் கொள்முதல் செய்திட தீர்மானம் அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சியின் அன்றைய நிதி நிலமையை கருத்தில் கொண்டு வாங்க இயலவில்லை. தற்போழுது அலுவலகத்தில் உள்ள அனைத்து கணினிகள் பழுதாகி பயன்படுத்த சிரமமாக உள்ளதால். நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்கள், மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களாலும் அனுப்பப்படும் அறிக்கைகளுக்கு உடனுக்குடன் கணினி மூலம் சமர்பிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட கணினி உபகரணங்களை விலைப்புள்ளி பெற்று குறைந்த விலை விகிதத்தில் கொள்முதல் செய்திடவும்,
<table>
<tr><th>SI NO</th><th>ITEM</th><th>QTY</th></tr>
<tr><td>1</td><td>HP DESKTOP 280 G2 P/NO.1RX59PA CORE i5-7100 7th GEN,4GB RAM,1TB HDD,DVD R/W, W 10 64BIT ,18.5” LED MONITOR,3YEARS ONSITE WARANTY.</td><td>5No</td></tr>
<tr><td>2</td><td>EPSON L380 INK TANK COLOUR PRINTER</td><td>1No</td></tr>
<tr><td>3</td><td>TVS MSP 450 STAR 24PIN 80 COLUMN PRINTER</td><td>2No</td></tr>
<tr><td>4</td><td>CANON LIDE-120 COLOUR SCANNER</td><td>2No</td></tr>
<tr><td>5</td><td>HP M1005 LASER JET PRINT SCAN COPY</td><td>2No</td></tr>
<tr><td>6</td><td>BIO METRIC LCD TIME ATTENDENCE MECHINE</td><td>4No</td></tr>
</table>
மேலும் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினிகளை பராமரிப்பு செய்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள் எண்–14</td><td>சீர்காழி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் மின்சார அறையில் உள்ள மின் மீட்டர் பொறுத்தப்பட்டுள்ள பலகை, மீட்டர் பாக்ஸ், பிரேக்கர் மற்றும் ஒயரிங் மிகவும் பழுதடைந்து மின் கசிவு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேரில் ஆய்வு செய்த போது பொது மக்கள் அதிகம் கூடும் இடம் ஆகையால் அதனை உடனடியாக பராமரிப்பு பணி செய்திட வேண்டியது அவசியமாகிறது. மேலும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள மின்சார அறையில் பராமரிப்பு செய்திடவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள் எண்–15</td><td>சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு மேஜை, நாற்காலி மற்றும் பீரோ ஆகியவை போதிய அளவு இல்லாத காரணத்தால் பணிபுரிவதற்கு மிகவும் சிரமமாக உள்ளதை நகராட்சி ஆணையரிடம் தெரிவித்ததை தொடர்ந்து ஆணையர் அவர்களின் அறிவுறைப்படி தணித்தணி கேபின்களாக அமைப்பதற்கும், நாற்காலி மற்றும் பீரோ ஆகியவற்றை வாங்குவதற்கும் ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
</table>

| | |
|---|---|
| | அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–16 | சீர்காழி நகராட்சி காமராஜர் வீதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பவளவிழா வணிக வளாக கட்டிடம் மிகவும் பழுதடைந்து மழை காலங்களில் மழை நீர் கசிவு ஏற்படுவதால் அதில் இயங்கி வரும் 7 கடைகளையும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே கடை ஏலதாராகள் அனைவரும் நகராட்சி ஆணையர் அவர்களை நேரில் சந்தித்து பராமரிப்பு செய்து தருமாறு கேட்டுக் கொண்டதற்க்கு இனங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் கடைகளை நேராய்வு மேற்கொண்ட போது மேற்படி பணி செய்ய வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு அறிவுறுத்தியதின் பெயரில் தாயரிக்கப்பட்ட மதிப்பீடு ரு.3.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–17 | சீர்காழி நகராட்சி ஈ.வே.ரா தெருவில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடத்தின் மேற்க்கூரை மற்றும் மாடிப்படி ஆகியவை மிகவும் பழுதடைந்து மழை காலங்களில் மழை நீர் கசிவு ஏற்படுவதால் அதில் இயங்கி வரும் கடைகள் பயன்படுத்த ஏதுவான நிலையில் இல்லாததால் கடை ஏலதாராகள் அனைவரும் நகராட்சி ஆணையர் அவர்களை நேரில் சந்தித்து பராமரிப்பு செய்து தருமாறு கேட்டுக் கொண்டதற்க்கு இனங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்கள் கடைகளை நேராய்வு மேற்கொண்ட போது மேற்படி பணி செய்ய வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு அறிவுறுத்தியதின் பெயரில் தாயரிக்கப்பட்ட மதிப்பீடு ரு.6.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்–18 | சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப்பிவில் இயங்கி வரும் குப்பை அகற்றும் டிப்பர்லாரி TN 51 T 8149 வாகனத்திற்கு தகுதிசான்று பொறும் பொருட்டு பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரியதில் 3.5.2018 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | டேவணித் தொகை |
|---|---|---|---|
| 1 | M.மகஷ்குமார், M.M.K ஆட்டோகேர், மெயின் ரோடு, சட்டநாதபுரம், சீர்காழி. | ரு.41,250/- | செ.சீ.எண்:0000284 தேதி:2.5.2018 |
| 2 | R.சபரிராஜன், வீரமகாகாளியம்மன் ஆட்டோ ஒர்க்ஸ், தென்பாதி | ரு.43,950/- | செ.சீ.எண்:0000285 தேதி:2.5.2018 |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்-1ல் குறிப்பிட்டுள்ள M.மகஷ்குமார், மெயின் ரோடு, சட்டநாதபுரம் என்ற நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(அ.கு) 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கவும், பணிகள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.820/2018/எச்1)

| | |
|---|---|
| பொருள் எண்–19 | சீர்காழி நகராட்சியில் 10 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் இதர துப்புரவு பணிகளை மேற்கொள்ள மனித சத்திகளை வழங்கும் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 30.4.2018 அன்று கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. |

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | கொடுத்துள்ள ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|

<table>
<tr><td></td><td>
<table>
<tr><td>1</td><td>L.ஞானவேல்,<br>ஊழியக்காரன் தோப்பு, பூந்தோட்டம் தெரு,<br>சீர்காழி.</td><td>நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.334.20</td></tr>
<tr><td>2</td><td>நண்பா செக்யூரிட்டி ஹவுஸ் கீப்பிங் சர்வீஸ்,<br>K.V நல்லூர், A.K சத்திரம்</td><td>நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.360.00</td></tr>
</table>
மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்-1ல் கண்டுள்ள திரு. L.ஞானவேல் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அதை ஏற்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
(அ.கு) 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவும், பணி மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.821/2018/எச்1)
</td></tr>
<tr><td>பொருள் எண்–20</td><td>
இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனஙகளில் (2015-2018 வரை) குத்தகை காலம் முடிவடைந்த நிலையில் குத்தகை மற்றும் நிலுவைத்தொகையினை கீழ்கண்ட 4 இனங்கள் செலுத்தப்படாமல் உள்ளன.<br>
1) பி.பிரகாஷ், கீழதென்பாதி, சீர்காழி<br>
1920 ஆண்டு நகராட்சி சட்டம் 270 பிரிவின் கீழ் வசூல் செய்தல்<br>
2) டி.சீனிவாசன், திருத்தாளமுடையார் கோயில் தெற்கு வீதி<br>
முருகன் பூங்கா கட்டண கழிப்பறை<br>
3) பி.பிரகாஷ், கீழதென்பாதி, சீர்காழி<br>
புதிய பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பறை<br>
4) கே.வீரமணி, பிடாரி தெற்கு வீதி.<br>
பழைய பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பறை<br>
மேற்கண்ட தொகையினை ஏலத்தாரரிடம் வசூல் செய்திட நீதிமன்றத்திடம் வழக்கு தொடரவும், வழக்கின் செலவினத்திற்கு உத்தேச மதிப்பாக ரூ.25,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்க வேண்டப்படுகிறது.<br>
(அ.கு) 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.8618/2014/அ.1)
</td></tr>
</table>

(ஒம்). திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–16.05.2018

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.

# சீர்காழி நகராட்சி



**2018 –ம் ஆண்டு மே மாதம் 24.05.2018 திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

**பொருள் எண்–1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.11 நாள்.12.01.1998-ல் வெளியிடப்பட்டுள்ள தொழில்வரி சட்ட விதிகளின்படி சீர்காழி நகராட்சி பகுதியில் உள்ள வணிகர்கள், தொழில்வரி புரிவோர், அரசு துறையினை சார்ந்தோர், சுயதொழில் புரிவோர் மற்றும் வியாபார தொழில் நிறுவனங்கள் நடத்துவோர் ஆகியோர்களுக்கு தொழில்வரி விகிதங்களை தொழில்வரி சட்டம் (Act 59 of 1998 and rules) 124-D பிரிவு 13-ன்படி 01.102018 முதல் உயர்வு செய்து வசூலிக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை கடித எண்.12503/ஆர்.1 நாள்.21.05.2018 –ன்படி வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் தொழில் வரி உயர்வு சம்மந்தமாக நகர்மன்ற தீர்மான எண்.468 நாள்.17.10.2013 ல் தொழில் வரி 30% உயர்வு செய்து கீழ்கண்டவாறு அட்டவணையின்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | 6 மாதம் மொத்த வருமானம் ஊதியம் | தொழில் வரி (ஒரு அரையாண்டிற்கு) |
|---|---|---|
| 1 | ரு.21000 வரை | 0 |
| 2 | ரு.21001 to 30000 வரை | 130 |
| 3 | ரு.30001 to 45000 வரை | 325 |
| 4 | ரு.45001 to 60000 வரை | 640 |
| 5 | ரு.60001 to 75000 வரை | 955 |
| 6 | ரு.75001 to அதற்கு மேல் | 1265 |

அ) இந்திய அரசியல் சாசனம் பிரிவு 276(2) ன்படி ஒரு வருடத்திற்கு ஒரு நபருக்கு ரூ.2500/- மிகாமல் தொழில்வரி வசூலிக்க வேண்டும் என்பதால், மேற்காணும் வரிசை எண் 6 ல் நடைமுறையில் உள்ள தொழில் வரி 2018-2019 ஆம் இரண்டாம் அரையாண்டிற்கு ரூ.1250/- மிகாமல் (ஆண்டிற்கு ரூ.2500/- மிகாமலும்) தொழில்வரி வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ஆ) 2013 முதல் 2018 வரை 5 ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டதாலும், மேற்படி அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி, தொழில் வரி 25% முதல் 35% வரை 01.10.2018 முதல் இரண்டாவது அரையாண்டு முதல் தொழில்வரி உயர்த்தி வழங்குவது தொடர்பாகவும் கீழ்கண்டவாறு தொழில் வரி நிர்ணயம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | 6 மாதம் மொத்த வருமானம் ஊதியம் | தற்போது வசூலிக்கப்படும் ஒரு அரையாண்டு | 01.10.2018 முதல் உத்தேசிக்கப்பட்டுள்ள வரி ஒரு அரையாண்டிற்கு (25கூ உயர்வு) |
|---|---|---|---|
| 1 | ரு.21000 வரை | 0 | 0 |
| 2 | ரு.21001 to 30000 வரை | 130 | 165 |
| 3 | ரு.30001 to 45000 வரை | 325 | 410 |
| 4 | ரு.45001 to 60000 வரை | 640 | 800 |
| 5 | ரு.60001 to 75000 வரை | 955 | 1195 |
| 6 | ரு.75001 to அதற்கு மேல் | 1265 | 1250 |

இ) மன்றம் முடிவு செய்து உயர்வு செய்யப்பட்ட தொழில் வரி விகிதத்தை பொதுமக்கள் அறியும் வகையில் தினவரி நாளேடு ஒன்றில் விளம்பரம் செய்யவும், மாவட்ட அரசிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1520/2018/அ1

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–24.05.2018

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.